***STC. 411/2021***

**PW1 – கருணாநிதி** **நாள். 11.12.2024.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் வந்திருக்கிறேன் என்பதால் நீதிமன்ற நடவடிக்கைகள் எனக்கு நன்கு தெரியும் என்றால் - சரிதான். நான் என்ன பணி செய்து ஓய்வு பெற்றுள்ளேன் என்றால் - கிராம நிர்வாக அலுவராக இருந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். நான் பணி ஓய்வு பெற்று எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் - கிட்டதட்ட 16 வருடங்கள் ஆகிறது.

2. நான் எதிரிக்கு பணம் கொடுத்தபோது அவர் எந்த பணியில் இருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் - ஆசிரியராக இருந்தார். எந்த பள்ளியில் வேலை பார்த்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் - தெரியாது. வருமான வரி செலுத்துகிறேனா என்றால் - 8 வருடங்களாக செலுத்துகிறேன். கிராம நிர்வாக அலுவலராக இருந்து ஓய்வு பெற்ற காரணத்தினால் வரவு செலவு குறித்த விவரங்களை வருமான வரி கணக்கில் காண்பிக்க வேண்டும் என்றால் - சரிதான். நான் அவ்வாறு எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் தொகையை அந்த ஆண்டு வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் - அந்த வருடம் அந்த தொகையை காண்பிக்கவில்லை. வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதால், வழக்கு முடிவுற்ற பின்பு வருமான வரி கணக்கில் காண்பிக்கலாம் என்று தணிக்கையாளர் சொன்னதன் பேரில் காண்பிக்கவில்லை.

3. சாதாரணமாக ரூ.9,60,000/- என்பது பெருந்தொகை என்றால் - சரிதான். இந்த தொகை வட்டிக்காக கொடுக்கப்பட்டதா என்றால் - இல்லை. பழகிய பழக்கத்திற்காக கொடுக்கபட்டது. பழகிய பழக்கத்திற்காக யாரும் இவ்வளவு தொகையை கைமாற்றாக கொடுக்கமாட்டார்கள் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் -சரியல்ல.

4. பொதுவாக, ரூ.50 ஆயிரத்திற்கு மேல் பரிவர்த்தனை செய்தால் வங்கி மூலமாக தான் நடைபெறவேண்டும் என்றால் - சரிதான். இந்த வழக்கில் எதிரிக்கு நான் வங்கி மூலமாக மேற்படி தொகையை கொடுக்கவில்லை என்றால் - சரிதான். தனியார் வியாபாரி செந்தில்குமாரவேலிடம் நெல் போட்ட பணம் ரூ.10,00,000/- ஆஜர் எதிரி பெற்றுக்கொண்டு அதிலிருந்து ரூ.9,60,000/- எடுத்துக்கொண்டு மீதி

தொகையான ரூ.40 ஆயிரத்தை என்னிடம் கொடுத்தார். அதனால், மேற்படி தொகை கொடுக்கப்பட்டதால் வங்கி கணக்கிலிருந்து கொடுக்கவில்லை.

(**வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது**).

ஒம்/- எம். சுரேஷ்கார்த்திக்,

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.